தி இந்து
தமிழால் இணைவோம்
25.05.2014

# கண் மருத்துவத்துறையில் புதிய வேலைவாய்ப்புகள்

## சங்கர நேத்ராலயாவில் மாணவர்களுக்கு ஆலோசனை

சென்னை

கண் மருத்துவத் துறையில் மாணவர்களுக்கு என்னென்ன புதிய வேலை வாய்ப்புகள் உள்ளன என்பது பற்றி சங்கர நேத்ராலயா மருத்துவ மனையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி சனிக்கிழமை நடந்தது.

சங்கர நேத்ராலயா அகாடமியின் தலைவர் ரமணி இந்நிகழ்ச்சியில் பேசுகையில், "மருத்துவத்துறையில் மருத்துவர்கள், நிபுணர்கள் மட்டுமின்றி மருத்துவ உதவியாளர்கள், செவிலிய உதவியாளர்கள், ஆய்வுக்கூட உதவியாளர், விற்பனை உதவியாளர் என பலர் தேவைப்படுகின்றனர்.



ரமணி

இது போன்ற பணிகளில் சேர, பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவுடன் சான்றிதழ் படிப்புகள், டிப்ளமோ படிப்புகளில் சேரலாம். உதாரணமாக கண்ணாடிகளை விற்கும் கடைகளில், உதவியாளராக சேர ஒரு வருட படிப்பில் சேரலாம்.

கண்களை சோதனை செய்யும் கருவிகளைப் பற்றிய படிப்பான ஆப்டோமெட்ரி பிரபலமாக உள்ளது. மருத்துவ மனை மேலாண்மையில் இளங்கலை படிப்பை அறிமுகப்படுத்த எம்.ஜி.ஆர் மருத்துவ பல் கலைக்கழகத்தின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறோம்," என்றார்.

இந்நிகழ்ச்சியில், பன்னிரண்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் கலந்து கொண்டனர்.